Australian Government

COVID-19 VACCINATION

# ‘ஆஸ்ட்ரா-ஸெனெகா’-வைப் பற்றிய தகவல்கள்

## ஆஸ்ட்ரா-ஸெனெகா தடுப்பூசி மருந்து

‘ஆஸ்ட்ரா-ஸெனெகா’ தடுப்பூசி மருந்திற்கும், இரத்த உறைவு மற்றும் குறைந்த இரத்த வட்டுகள் (blood platelets) ஆகியவற்றோடு சம்பந்தப்பட்ட அரிதான நிலை ஒன்றிற்கும் இடையே ஒரு தொடர்பு இருக்கிறது. ‘த்ரோம்போ-சைட்டொபீனியா எனும் நோயறிகுறியோடு கூடிய த்ரோம்போஸிஸ்’ (Thrombosis with thrombocytopenia syndrome (TTS)) என்று இந்த நிலை அழைக்கப்படுகிறது.

வயதுவந்த அனைவருக்கும் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து சிபாரிசு செய்யப்படுகிறது. 60 வயதிற்குக் கீழ்ப்பட்ட வயதுவந்தோருக்கு ‘ஃபைஸர்’ தடுப்பூசி மருந்து ‘கோவிட்-19’-இற்கு எதிராகத் தெரிவுசெய்யப்படும் தடுப்பூசி மருந்தாகும். இருந்தாலும், 60 வயதிற்குக் கீழ்ப்பட்ட வயதுவந்தவர்கள் இப்போதும் ‘ஆஸ்ட்ரா-ஸெனெகா’ தடுப்பூசி மருந்தைப் பெற்றுக்கொள்ளும் தெரிவினை மேற்கொள்ளலாம். உங்களுடைய முடிவை மேற்கொள்வதில் உங்களுக்கு உதவ உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள்.

60 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையோருக்கு ‘ஆஸ்ட்ரா-ஸெனெகா’ தடுப்பூசி மருந்து கொடுக்கப்படும்.

### ‘த்ரோம்போ-சைடொபீனியா நோயறிகுறியோடு கூடிய த்ரோம்போஸிஸ்’ Thrombosis with thrombocytopenia syndrome (TTS) என்றால் என்ன? (இந்த நிலையை TTS என்று சொல்வர்)?

‘த்ரோம்போஸிஸ்’ என்றால் இரத்த உறைவு என்று பொருள்.

‘த்ரோம்போ-ஸைட்டொபீனியா’ என்பது ‘இரத்த வட்டுகள்’ (blood platelets) குறைவாக இருக்கும் நிலையைக் குறிக்கும்.

TTS என்பது ‘ஆஸ்ட்ரா-ஸெனெகா’ தடுப்பூசி மருந்தினால் ஏற்படவல்ல அரிதான பக்க விளைவு ஆகும். இது ஏற்பட்டால், இது வினயமானதாகவும், இயலாமை அல்லது மரணத்தை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கலாம். உடலின் வெவ்வேறு பகுதிகளில் ஏற்படக்கூடிய இரத்த உறைவுகளை இது ஏற்படுத்தும். இரத்தக் கசிவினை ஏற்படுத்தக்கூடிய இரத்த வட்டுகள்

குறைவடையும் நிலையையும் இதனால் ஏற்படுத்த இயலும். 'ப்ஃபைஸர்' தடுப்பூசி மருந்திற்கும் TTS -இற்குமிடையே தொடர்பு எதுவுமில்லை.

### TTS எப்போது ஏற்படும்?

பொதுவாக, 'ஆஸ்ட்ரா-ஸெனெகா' தடுப்பூசி மருந்தின் முதல் மருந்தளவினை இட்டுக்கொண்ட பிறகு வரும் 4 முதல் 42 நாட்களுக்கு இடையே TTS ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள தருணங்கள் நிகழ்ந்துள்ளன.

### TTS எந்த அளவிற்குப் பொதுவானது?

TTS அரிதானது. 'ஆஸ்ட்ரா-ஸெனெகா' தடுப்பூசி மருந்தைப் பெறும் 100,000 ஆட்களுக்கு 1-2 பேரை இது பாதிப்பதாகத் தற்சமயம் மதிப்பிடப்படுகிறது. ஆனால் 60 வயதிற்குக் கீழ்ப்பட்ட வயது உள்ளவர்களில் இந்த வீதமானது 100,000 ஆட்களுக்கு ஏறத்தாழ 2-3 பேர்கள் வரை என்று அதிகமாக இருப்பதாக மதிப்பிடப்படுகிறது. மேலதிகத் தகவல்கள் கிடைப்பிற்கு வர வர இந்த மதிப்பீடுகள் புதுப்பிக்கப்படும்.

### TTS ஏற்படுவதற்கான அபாயம் அதிகம் உள்ள குழுவினர் எவரும் இருக்கிறார்களா?

வயது அதிகமான வயதுவந்தோர் சிலரில் இது ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இளம் வயதுடைய வயதுவந்தோரில் TTS அதி பொதுவானதாகத் தோன்றுகிறது. இரத்த உறைவிற்குப் பங்களிப்பு செய்யக்கூடிய முன்பிருந்தே இருக்கும் மருத்துவ நோய்நிலைகள் ஏதும் உள்ளனவா என்று நமக்குத் தெரியாது. ஆராய்ச்சியாளர்கள் இது குறித்து ஆய்வு செய்துவருகின்றனர்.

### TTS-இன் நோயறிகுறிகள் யாவை?

பின்வரும் நோயறிகுறிகளில் சிலவற்றை TTS தோற்றுவிக்கக்கூடும்:

- பின்வரும் வகையிலான தொடர்ந்து நீடிக்கும் கடும் தலைவலி:
  - தடுப்பூசி இடப்பட்டதிலிருந்து குறைந்தபட்சமாக 2 நாட்களுக்குப் *பிறகு* ஏற்படும்
  - சாதாரண வலி நிவாரணிகளால் குணமடையாது
  - படுத்திருக்கும்போது இன்னும் தீவிரமானதாக இருக்கலாம்
- குமட்டல் மற்றும் வாந்தி
- மங்கிய பார்வை
- பேசுவதில் சிரமம்
- மயக்கச் சோர்வு
- வலிப்புகள்
- சுவாசிப்பதில் சிரமம்
- நெஞ்சுவலி
- உங்கள் காலில் வீக்கம்
- தொடர்ந்து நீடிக்கும் வயிற்றுவலி

- ஊசி போடப்பட்ட இடத்தை விட்டுத் தள்ளி தோலுக்குக் கீழே காணப்படும் இரத்தப் புள்ளிகள்.

'கோவிட்-19' தடுப்பூசி மருந்து ஒன்றை இட்டுக்கொண்ட பிறகு உங்களுக்கோ, இன்னொருவருக்கோ பாரதூரமான இந்தப் பக்க விளைவுகளில் ஏதும் ஏற்பட்டால், '000' (மூன்று பூஜ்யம்)-வை நீங்கள் உடனடியாக அழைக்கவேண்டும்.

## 'ஆஸ்ட்ரா-ஸெனெகா' தடுப்பூசி மருந்தின் பலன்கள் அதன் ஆபத்துகளை விட அதிகமா?

ஆம். குறிப்பாக, 'கோவிட்-19' காரணமாக மிகவும் நோய்வாய்ப்படும் ஆபத்து உயர்வாக உள்ள வயதானவர்களுக்குத் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதனால் கிடைக்கும் பலன்கள் அதிகமாகும்.

## நீங்கள் 60 வயதிற்குக் குறைவானவராக இருந்து, உங்களுடைய முதல் 'ஆஸ்ட்ரா-ஸெனெகா' தடுப்பூசி மருந்தளவினை இட்டுக்கொள்வதற்கான முன்பதிவு உங்களுக்காக செய்யப்பட்டிருந்தால் என்ன ஆகும்?

உங்களுடைய முதல் 'ஆஸ்ட்ரா-ஸெனெகா' தடுப்பூசி மருந்தளவினை இட்டுக்கொள்வதற்கான முன்பதிவு உங்களுக்காக செய்யப்பட்டிருந்தால், மற்றும் நீங்கள் 60 வயதிற்குக் குறைவானவராக இருந்தால், உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள். தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொள்ளலாமா இல்லையா என்று நீங்கள் முடிவு செய்ய அவர் உங்களுக்கு உதவுவார்.

## உங்களுடைய முதல் 'ஆஸ்ட்ரா-ஸெனெகா' தடுப்பூசி மருந்தளவினை நீங்கள் இட்டுக்கொண்டிருந்தால், உங்களுடைய இரண்டாவது மருந்தளவை நீங்கள் பெற வேண்டிய தருணத்தில் என்ன செய்வது?

TTS ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள ஏறத்தாழ அனைத்துத் தருணங்களும் 'ஆஸ்ட்ரா-ஸெனெகா கோவிட்-19' தடுப்பூசி மருந்தின் முதல் அளவினை இட்டுக்கொண்ட பிறகு நிகழ்ந்தன. 'ஆஸ்ட்ரா-ஸெனெகா தடுப்பூசி மருந்தின் முதல் அளவினை இட்டுக்கொண்ட பிறகு கடும் பக்க விளைவுகள் ஏதும் உங்களுக்கு ஏற்பட்டிருக்கவில்லை என்றால், நீங்கள் 60 வயதிற்குக் குறைவானவராக இருந்தாலும் கூட உங்களுடைய இரண்டாவது மருந்தளவைப் பெற்றுக்கொள்வதில் நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கலாம்.

## கடந்த காலத்தில் இரத்த உறைவுகள் ஏற்பட்டுள்ளவர்களுக்கு 'ஆஸ்ட்ரா-ஸெனெகா' தடுப்பூசி மருந்து பாதுகாப்பானதா?

வேறு வகையான இரத்த உறைவுகள் உங்களுக்குக் கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்தாலும், அல்லது இரத்த உறைவுகள் ஏற்படும் ஆபத்து உங்களுக்கு இருந்தாலும் கூட, 'ஆஸ்ட்ரா-ஸெனெகா' தடுப்பூசி மருந்தினை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். 'ஆஸ்ட்ரா-ஸெனெகா' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்டதையடுத்து முன்பு ஏற்பட்ட இரத்த உறைவின் காரணமாக TTS ஏற்படும் ஆபத்து அதிகரிக்கிறது என்பதற்கான சான்று எதுவும் இல்லை.

## மேலதிகத் தகவல்களுக்கு

‘ஆஸ்ட்ரா-ஸெனெகா’ தடுப்பூசி மருந்தினைப் பற்றிய கேள்விகள் ஏதும் உங்களுக்கிருந்தால், உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள், www.health.gov.au/covid19-vaccines-languages எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள், அல்லது 1800 020 080 எனும் இலக்கத்தில் ‘தேசிய கொரோனா-வைரஸ் உதவி இணைப்’ (National Coronavirus Helpline) புடன் தொடர்புகொள்ளுங்கள். மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு 131 450 -ஐ அழையுங்கள்.